இந்தத் திட்டம் பயன்படும். பலகோடி ரூபாயை வட மாநிலங்களில் சிலவற்றிற்கு செலவு செய்கிற மத்திய அரசு இதை கால தாமதப்படுத்துவது தமிழகத்திற்கு பாரபட்சம் காட்டுகிறதோ என்ற ஒரு சந்தேகம் இன்றைக்கு தமிழ் மக்கள் மத்தியில் எழ ஆரம்பித்து இருக்கிறது. இந்தத் திட்டம் வலியுறுத்தப்படுமானால் இன்றைக்கு சர்வ கட்சித் தலைவர்கள், பேசியிருக்கக்கூடிய கருத்தின் மூலமாக மத்திய அரசு சீக்கிரமாக இணக்கமாக இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு முன் வரவேண்டும் என்பதை நான் இந்தத் தீர்மானத்தின் மூலம் வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்து மகா சமுத்திரத்தில் இந்தியாவுக்கும், உலகத்திற்கும் போர் அபாயம் நிலவுகின்ற சூழ்நிலையில் இந்திய ராணுவ பாது காப்புக்கு இது ஒரு அவசரமாக அமல்படுத்த வேண்டிய திட்டம் என்று இன்றைக்கு மக்களால் கருதப்படக்கூடிய நிலைமை ஏற் பட்டிருக்கிறது. கன்னியாகுமரி வரை நீட்டிக்கப்பட்டு, கிழக்கு கடற்கரைச் சாலை அமைக்கும் பொறுப்பை முழுவதுமாக மத்திய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோன்று கிழக்கு கடற்கரையோரத்தில் குமரி முதல் கல்கத்தா வரை, புதிய அகல இரயில் பாதை போடுவதற்கு மத்திய அரசு முன்வர வேண்டும். இந்தத் திட்டங்களை நிறை வேற்றுவதன் மூலமாக.....(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானத்தின் மீதான விவாதம் அடுத்த தனியார் அலுவல்களுக்காக ஒதுக்கப்படும் நாளில் தொடரும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை (12–5–1986) காலை 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–30 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்,

92. வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 26–3–1981 ஆம் நாளிட்ட II (1)/CTRE/164 (c)/81 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 3–1–1986 ஆம் நாளிட்ட 11 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

1986 மே 10]

93. வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 6–9–1977 ஆம் நாளிட்ட II (1)/CTRE/203/77 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 20–11–1985 ஆம் நாளிட்ட 1051 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

94. பூந்தமல்லி, ஊரக வேலை வாய்ப்புத் திட்ட சங்கத்தினரால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு செலுத்தக் கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 16–12–1985 ஆம் நாளிட்ட 1102 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

95. தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் 1979–80 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 323 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.) (ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

183. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1986) இணைப்புடன்.

184. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும்-விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (பதினான்காவது பட்டியல்).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

128—119—20